05.03.2026

O.S.No.451/2011

PW1- பூபதிராஜா – த/பெ. ஈஸ்வரன்

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 05.03.2026

<u>குறுக்கு விசாரணை :</u> ( 1 முதல் 4 மற்றும் 16 முதல் 21 பிரதிவாதி தரப்பில்)

1. வழக்கு சொத்தின் சர்வே எண் தெரியுமா என்றால் தெரியாது.

2. என் தகப்பனார் ஈஸ்வரன் எப்போது இறந்தார் என்றால் 2016 ம் வருடம் இறந்தார்.

3. என் தாத்தா பெயர் என்ன என்றால் ஊர்காலன்.

4. ஊர்காலனுக்கு எத்தனை வாரிசுகள் என்றால் 5 நபர்கள் முருகையா, ஈஸ்வரன், முருகாத்தாள், பண்டாரம், சின்னமணி ஆகியோர் ஆவர்.

5. எனக்கு என்ன தொழில் என்றால் விவசாய தொழில்.

6. நான் என்ன ஊரில் வசித்து வருகிறேன் என்றால் சொக்கம்பட்டி கிராமத்தில் வசித்து வருகிறேன்.

7. 1 முதல் 4 பிரதிவாதிகள் ஏற்கனவே அ.வ.64/2003 என்ற வழக்கை தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் எனக்கு அது பற்றி தெரியாது.

8. மேற்படி வழக்கில் 5 முதல் 12 பிரதிவாதிகள் தரப்பினராக இருந்தார்கள் என்றால் எனக்கு அது பற்றி தெரியாது.

9. 5 முதல் 12 பிரதிவாதிகள் எனக்கு சகோதர சகோதரி உறவு முறை என்றால் சரிதான் தற்போது பேச்சுவார்த்தை இல்லை.

10. அ.வ.64/2003 வழக்கில் இரண்டாம் மேல்முறையீடு வரை 1 முதல் 4 பிரதிவாதிகளுக்கு ஆதரவாக தீர்ப்பாகியது என்றால் சரிதான்.

11. அ.வ.64/2003 வழக்கில் சொத்துக்கள் 1 முதல் 4 வாதிகளுக்கு ஆதரவாகவும், 5 முதல் 12 பிரதிவாதிகளுக்கு எதிராகவும் தீர்ப்பாகியது என்றால் சரிதான்.

12. வழக்கு விவரம் அனைத்தும் எனக்கு தெரியும் என்றால் சரிதான்.

13. நான் வாதிகளுக்கும், 5 முதல் 12 பிரதிவாதிகளுக்கும் பிராது தபசில் சொத்து உரிமையானது என வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். ஆனால் எனக்கு மட்டும் சொத்து கொடுத்தால் போதும்.

14. ஏற்கனவே அ.வ.64/2003 வழக்கில் இறுதிநிலை அடைந்துவிட்டதால் நான் இந்த வழக்கை தாக்கல் செய்ய சட்டப்படி தடை செய்யப்பட்டுள்ளேன் என்றால் சரியல்ல.

15. எனக்கு தற்போது என்ன வயது என்றால் 42 வயது ஆகும்.

16. என் வீட்டிற்கு நேர் எதிரே தபசில் சொத்து உள்ளது என்றால் சரிதான்.

17. அ.வ.64/2003 வழக்கில் நீதிமன்ற ஆணையர் ஸ்தல பார்வையிட்டார் என்றால் எனக்கு அது பற்றி தெரியாது இந்த வழக்கில் நீதிமன்ற ஆணையர் வந்தார்.

18. பழைய வழக்கு விவரம் தெரிந்து தான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான்.

19. சொத்திற்கு மேற்கு பக்கம் புணமாலை குடும்பன் இடம் உள்ளது என்றால் சரிதான். சொத்திற்கு தென்பக்கம் கிழமேல் ரோடு உள்ளது என்றால் சரிதான். சொத்திற்கு கீழ்ப்பக்கமும் தென்வடல் ரோடு உள்ளது என்றால் சரிதான். சொத்திற்கு வடக்கே கிணறு உள்ளது என்றால் சரிதான். இந்த எல்கை மால்களுக்கு உட்பட்ட சொத்தில் தான் அ.வ.64/2003 வழக்கில் இறுதிநிலை அடைந்தது என்றால் சரிதான்.

20. அ.வ.64/2003 வழக்கில் பிறப்பித்த தீர்ப்பு செல்லாது என நான் பரிகாரம் கோரியுள்ளேனா என்றால் இல்லை.

21. ஊர்காலன் பெயரில் சொத்திற்கு தனி பட்டா உண்டா என்றால் இல்லை.

22. ஊர்காலன் இறந்துவிட்டார் என்றால் சரிதான். அவர் இறந்து 50 அல்லது 60 வருடம் இருக்கும் என்றால் சரிதான்.

23. ஊர்காலன் என் தகப்பனாருக்கோ, என் பெயருக்கோ அல்லது அவரது வாரிசுகளுக்கோ எந்த ஆவணமும் எழுதிவைக்கவில்லை என்றால் சரிதான்.

24. ஊர்காலனின் அனைத்து வாரிசுகளையும் நான் இந்த வழக்கில் தரப்பினர்களாக சேர்த்துள்ளேன் என்றால் சரிதான்.

25. ஏற்கனவே 1 முதல் 4 பிரதிவாதிகள் ஊர்காலன் வாரிசுகள் மீது வழக்கு தாக்கல் செய்து அது தீர்ப்பாகிவிட்டதால் இந்த வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

26. என் தகப்பனார் சொக்கம்பட்டியில் தான் வசித்து வந்தார் என்றால் சரிதான்.

**<u>மறுவிசாரணை</u>**

இல்லை.

ஒம்/–J.ராஜேஷ்குமார்
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி(FAC)
தென்காசி